**ADM COURT, SANKARANKOVIL**

**தேதி 25.03.2026**

**அசல் வழக்கு எண். 163/2019**

**வா.சா.1 (கார்த்திகைசெல்வி) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பிராது தபசில் சொத்துக்களும், வேறு சொத்துக்களும் எனது தாத்தா ராமையாதேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அது அவரது பூர்வீக சொத்துக்கள். ராமையாதேவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 பிள்ளைகள். ராமையாதேவர் எப்போது இறந்தார் என்றால் எனக்கு 2–3 வயது இருக்கும்போது இறந்தார். தற்போது எனக்கு 47 வயதாகிறது. ராமையாதேவரின் மக்களான எனது தந்தை மற்றும் அவரது உடன்பிறந்தவர்கள் எனது தாத்தாவின் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொண்டார்களா என்றால் இல்லை. எனது தந்தை செல்லையாதேவருடன் பிறந்தவர்கள் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் தந்தையுடன் பிறந்தவர்கள் – செந்தூர்பாண்டியன், சீவலபாண்டியன், சண்முகையாபாண்டியன் ஆகியோர் ஆவார்.

2. பிராது தபசில் சொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சுப்பாத்தாய், பூசத்தாய், சீதாலட்சுமி, வேலுச்சாமி மற்றும் எனக்கு பாத்தியப்பட்டது. பிராது தபசில் சொத்துக்கள் மேற்கண்ட 5 நபர்களுக்கும் எவ்வாறு பாத்திய்பபட்டது என்றால் அந்த சொத்துக்கள் எனது தந்தை செல்லையாத்தேவருக்கு பாத்தியப்பட்டதால் எங்களுக்கு பாத்தியப்பட்டது. பிராது தபசில் சொத்துக்கள் செல்லையாத்தேவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அந்த சொத்துக்கள் ராமையாதேவரின் பூர்வீக சொத்துக்கள் என்பதால் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது. மேற்கண்ட பிரா து தபசில் சொத்துக்கள் பொறுத்து எனது தந்தை மற்றும் அவரது உடன்பிறந்தவர்கள் பாகப்பிரிவினை எதுவும் செய்துகொண்டனரா என்றால் இல்லை. அந்த சொத்துக்கள் எங்கள் குடும்பத்தின் கூட்டு அனுபவத்தில் உள்ளது.

3. ராமையாதேவருக்கு பெண் மக்கள் உண்டா என்றால் உண்டு. ராமையாதேவரின் மகள் பெயர் செல்லத்தாய். நானும், பிரதிவாதிகளும் பேசிக்கொள்வோமா என்றால் இன்றளவிலும் நாங்கள் பேசிக்கொள்வோம். எங்கள் தந்தை செல்லையாத்தேவர் எப்போது இறந்தார் என்றால் 2019 ம் வருடம் இறந்தார். எங்கள் தந்தை அவர்

உயிருடன் இருந்த காலத்தில் வேலுச்சாமிக்கு பிராது தபசில் சொத்துக்கள் பொறுத்து ஒரு ஏற்பாடு ஆவணம் பிறப்பித்துக்கொடுத்தார் என்றால் அந்த ஆவணம் நாங்கள் இருப்பதை மறைத்து மோசடியாக கொடுக்கப்பட்ட ஆவணம். அந்த ஆவணம் பிறப்பித்துக் கொடுக்கப்பட்ட சமயத்தில் அது ஏற்படுத்தப்பட்டது பற்றி எனக்கு தெரியாது.

4. இவ்வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளான எனது தாய் மற்றும் சகோதரிகள் அளித்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனது சகோதரர் வேலுச்சாமி அவரது சகோதரிகளான எங்களுக்கு 5 பவுன் நகை போட்டும், சீர் கொடுத்தும் திருமணம் செய்து வைத்ததாக கூறியுள்ளார். ஆனால் அவ்வாறு அவர் எதுவும் செய்யவில்லை. எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் சுமார் 17 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. அந்த திருமணம் வீட்டில் பார்த்து வைத்த திருமணமா அல்லது எனது விருப்பபடி நடந்த திருமணமா என்றால் எனது விருப்பப்படி நடந்த திருமணம். என்னுடைய திருமணத்தில் எனது தந்தை மற்றும் பிரதிவாதிகள் கலந்துகொண்டார்களா என்றால் இல்லை. மேற்கண்ட நபர்கள் எனது திருமணத்தில் கலந்துகொள்ளாதற்கு காரணம் என்னவென்றால் அவர்கள் சம்மதிக்காத திருமணத்தை நான் செய்துகொண்டதால் அவர்கள் கலந்துகொள்ளவில்லை. என்னுடைய திருமணத்திற்கு பிறகு எனது தந்தை செல்லையாத்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் எனக்கு எந்த பங்கும் தேவை இல்லை என்று தெரிவித்து விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை. எனது திருமணத்திற்கு பிறகு எனது தந்தை என்னிடம் பேசிக்கொள்வாரா என்றால் பேசிக்கொள்வார். நான் என் தந்தை வீட்டிற்கும், எனது தந்தை என் வீட்டிற்கு வந்துசெல்வோம்.

5. எனது தந்தை உயிருடன் இருந்த சமயத்தில் அவர் மட்டும் பிராது தபசில் சொத்துக்களை தனித்து அனுபவம் செய்து வந்தாரா என்றால் இல்லை. பிராது தபசில் சொத்துக்கள் எங்கள் அனைவரது கூட்டு அனுபவத்தில் இருந்தது. பிராது தபசில் சொத்திற்கு யாருடைய பெயரில் பட்டா இருந்தது என்றால் வேலுச்சாமி பெயரில் பட்டா இருந்தது. வேலுச்சாமி பெயரில் பட்டா ஏற்படுவதற்கு முன்பு அந்த சொத்துக்கள் பொறுத்து யாருடைய பெயரில் பட்டா இருந்தது என்றால் செல்லையாத்தேவரின்

பெயரில் பட்டா இருந்தது. செல்லையாத்தேவர் உயிருடன் இருந்த காலத்தில் எங்கள் குடும்ப சொத்துக்களில் நான் அவரிடம் பாகம் கேட்டேனா என்றால் இல்லை.

6. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும், எனக்கும் இடையில் விரோதம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. எதிர்வழக்குரையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்ன சங்கதிகள் சொல்லி கட்சி செய்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்குரையில் உள்ள விபரங்களை யார் கூறினார்கள் என்றால் நான்தான் கூறினேன். எவ்வளவு சொத்துக்கள் பொறுத்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 15 ஏக்கர் மொத்தம் விஸ்தீரணம் உடைய இடங்கள் பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

7. செல்லையாத்தேவர் வேலுச்சாமிக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2019ம் வருடம் 3ம் மாதம் தெரியவந்தது. மேற்கண்ட விபரம் எனக்கு எவ்வாறு தெரியவந்தது என்றால் 2019ம் வருடம் எனது சகோதரர் வேலுச்சாமி எனதுதந்தையிடமிருந்து சொத்துக்களை எழுதி வாங்கிவிட்டதாக ஊர்க்காரர்களிடமும், என்னிடமும் கூறியதன் பேரில் எனக்கு அந்த விபரம் தெரியவந்தது. பிராது தபசில் சொத்துக்களுக்கான வில்லங்க சான்றிதழ் என் கைவசம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்கண்ட வில்லங்கசான்றிதழை நான் எப்போது எடுத்து பார்த்தேன் என்றால் 2019ம் வருடம் 3ம் மாதம் எடுத்து பார்த்தேன். பிராது தபசில் சொத்துக்கள் பொறுத்து எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும், ராமையாதேவரின் மக்கள் வாய்மொழியாக பாகபிரிவினை செய்துகொண்டதில் பிராது தபசில் சொத்துக்கள் செல்லையாதேவரின் பாகத்திற்கு கிடைக்கப்பெற்ற அவரது தனிப்பட்ட சொத்துக்கள் என்றாலும் சரியல்ல. மேற்கண்ட பாகப்பிரிவினையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிராது தபசில் சொத்துக்கள் பொறுத்து செல்லையாதேவரின் பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டு அவரது தனித்த அனுபவத்தில் இருந்தது என்றால் சரியல்ல. மேற்கூறியவாறு பிராது த பசில் சொத்துக்கள் செல்லையாத்தேவரின் தனித்த அனுபவத்தில் இருந்தபோது அவர் 4ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்பாடு ஆவணம் ஒன்று பிறப்பித்துக்கொடுத்தார் என்றாலும், அந்த ஏற்பாட்டு ஆவணம் பிறப்பித்துக் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து பிராது தபசில் சொத்துக்கள் 4ம் பிரதிவாதியின் தனித்த அனுபவத்தில் இருந்து வருகின்றன என்றாலும் சரியல்ல. பிராது தபசில்சொத்துக்கள்

வாய்மொழி பாகபிரிவினை மூலம் செல்லையாத்தேவருக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்றாலும், அந்த சொத்துக்கள் பொறுத்து செல்லையத்தேவரின் மக்களுக்கு கூட்டுப்பாத்தியதை கிடையாது என்றாலும் சரியல்ல. செல்லையாத்தேவர் 4ம் பிரதிவாதிக்கு பிறப்பித்துக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் பொறுத்து கேள்வி கேட்பதற்கு எனக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. செல்லையாத்தேவர் 4ம் பிரதிவாதிக்கு 2012 ம் வருடம் ஏற்பாடு ஆவணம் பிறப்பித்துக்கொடுக்கும்போதே அந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்கண்ட ஆவணம் பொறுத்து 2019ம் வருடம் தெரியவந்ததாக நான் சொல்வதும், 2019ம் வருடம் பிராது தபசில் சொத்துக்கள் பொறுத்து வில்லங்கசான்றிதழ் எடுத்து பார்த்தபோது அந்த ஆவணம் பற்றி தெரியவந்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்களில் எனக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிராதுத பசில் சொத்துக்களில் 2012ம் வருடம் ஏற்பாடு ஆவணத்தின் மூலம் 4ம் பிரதிவாதிக்கு மட்டும் தனிப்பட்ட உரிமை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளன என்றாலும், வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழக்குமூலம் பொய்யானது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**